பக்கங்கள்: எட்டு

Registereb sa aNewespaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 18 புதன்கிழமை 3-12-1997 UTHAYAN A Lively NationalTamil Daily கதிர் 06

# காணாமற்போனோரின் பாதுகாவலரை சந்தித்துப் பேச ஜனாதிபதி இணக்கம்

## தேவானந்தாவின் வலியுறுத்தலை ஏற்றார்

கொழும்பு, டிச. 3

குடாநாட்டில் கைதான பின்னர் காணாமற் போனவர்களின் பாதுகாவலர்களை நேரில் சந்தித்துப் பேசி, அவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முன்வருமாறு யாழ். மாவட்ட எம். பியான டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்திக் கூறியதை அடுத்து அதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இணங்கினார்.

காணாமற்போனோர்;பாதுகாவலர் சங்கத்தின் பிரதிநிதிகளை எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பில் சந்தித்துப் பேசவும் ஜனாதிபதி நேரம் ஒதுக்கிக் கொடுத்தார்,

ஈ. பி. டி. பியின் தூதுக்குழு ஒன்று நேற்று மாலைஜனாதிபதியைச் சந்தித்து சுமார் இரண்டு மணி நேரம் பேச்சு நடத்தியது.

தூதுக்குழுவில் எம். பிக்களான டக்ளஸ் தேவானந்தா, எஸ். சிவதாஸன் மற்றும் அவர்களின் ஆலோசகர்கள் சி. தவராஜா, கலாநிதி விக்கினேஸ்வரன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

1996 ஆம் ஆண்டு குடாநாட்டில் காணாமல் போன 628 பேரின் பெயர்களடங்கிய பட்டியலையும், 1997 இல் காணாமற்போன 35 பேரின் பெயர்களடங்கிய பட்டியலையும் தூதுக்குழு ஜனாதிபதியிடம் கையளித்தது. அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்கும்படியும் குழுவினர் வற்புறுத்தினர்.

வன்னியில் மருந்து, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின்றி மக்கள்படும் அவலத்தை ஈ.பி.டி.பி. குழுவினர் ஜனாதிபதியிடம் விளக்கினர். வன்னிக்குச் சென்றுவந்த — மதத் தலைவர்கள் அடங்கிய — ஒரு குழு

(7 ஆம் பக்கம் பார்க்க)

# பஸ்ஸில் குண்டுவெடிப்பு;சூடு!

# ஒருவர் பலி;31 பேர் படுகாயம்!!

## மட்டு. களுதாவளையில் சம்பவம்

மட்டக்களப்பு, டிசம்பர் 3

மட்டக்களப்பு களுதாவளையில் நேற்று நண்பகல் பயணிகள் பஸ் ஒன்றில் பயணிகளுடன் படையினர் பயணம் செய்துகொண்டிருந்த சமயம், அதில் திடீரென கிரனேட் ஒன்று வெடித்தது; அதனைத் தொடர்ந்து பலத்ததுப்பாக்கிப்பிரயோகமும் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் பொதுமகன் ஒருவர் உயிரிழந்தார்; 31 பொதுமக்கள் காயமடைந்தனர்; அவர்களில் ஏழு பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பில் இருந்து நேற்று நண்பகல் புறப்பட்ட இந்தப் போக்குவரத்துச் சபை பஸ்ஸில் சுமார் ஐம்பது பயணிகள் வரை இருந்தனர், இந்த பஸ் ஆரையம்பதி அதிரடிப்படை முகாம் முன் சோதனைக்காக மறிக்கப்பட்டது.

படையினரின் சோதனை முடிந்த பின்னர் சில அதிரடிப் படையினரும் அந்த பஸ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் 700 பேர் வருகை

மட்டக்களப்பு, டிச. 3

திருகோணமலையிலிருந்து 700 பயணிகளுடன் 'லங்கா முடித' சரக்கு கப்பல் நேற்று மாலை காங்கேசன் துறை நோக்கி புறப்பட்டது.

காங்கேசன்துறையிலிருந்து இக்கப்பலில் 113 பேர் திருகோணமலை வந்து சேர்ந்தனர்.

(உ-21)

## காயமுற்றோர் விவரம்

மட்டக்களப்பு, டிச. 3

மட்டக்களப்பு களுதாவளையில் பஸ்ஸில் இடம்பெற்ற கிரனேட் வெடிப்பு மற்றும் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர்களின் விவரம் வருமாறு:

பார்வதி (48 வயது — துறை நீலாவணை), உதயராணி (17 வயது — பேற்றாத்தீவு). பரிமளம் (25 வயது — இலுப்படிச்சேனை) சந்திரலேகா (33 வயது — மகிழூர்முனை), ரேகா (11 வயது பெரிய கல்லாறு). மேலதிகா (6 வயது— கோட்டைக்கல்லாறு), யசோதா (24 வயது — கோட்டைக்கல்லாறு), தர்சினி (26 வயது — கோட்டைக் கல்லாறு), தனியா (35 வயது — காத்தான்குடி), வரதராசா (57 வயது — முறக்கொட்டாஞ்

( 8 ஆம் பக்கம் பார்க்க)

# விசாரணைக்கு கோருகிறார் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி

மட்டக்களப்பு, டிச. 3

களுதாவளையில் பஸ்ஸில் இடம்பெற்ற கிரனேட் வெடிப்புச் சம்பவம் குறித்து விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பாக நேற்றே அவர் ஜனாதிபதிக்கு அவசர 'பக்ஸ்' செய்தி ஒன்றை அனுப்பி வைத்தார்.

அச்செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

மட்டக்களப்பிலிருந்து திருக்கோயில் நோக்கிச் சென்ற மேற்படி இ.போ.ச. பஸ் வழமைக்கு மாறாக ஆரையம்பதி விசேட அதிரடிப்படை முகாம் முன்பு மறிக்கப்பட்டு

(7 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். கல்விக்கு 20 கோடி ரூபா

## ஜனாதிபதி நிதியிலிருந்து

கொழும்பு, டிச. 3

யாழ். மாவட்ட கல்விப் புனரமைப்புப் பணிகளுக்காக ஜனாதிபதி நிதியில் இருந்து 20 கோடி ரூபாவை வழங்க ஜனாதிபதி இணங்கியுள்ளார்.

நேற்று மாலை தம்மைச் சந்தித்த ஈ.பி.டி.பி. தூதுக்குழுவிடமே ஜனாதிபதி இந்த இணக்கத்தைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் புதிய கல்வி வலயங்கள் உருவாக்குவதற்கு கல்வி நிர்வாகசேவை

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## இரு பெண் சிப்பாய்கள் உட்பட

# ஒன்பது படையினர் உயிரிழப்பு மடுச்சந்தித் தாக்குதலில்!

வவுனியா, டிச. 3

மன்னார் — வவுனியா வீதி மடு சந்திக்கு அருகில் நேற்றுக் காலை 9 30க்கு விடுதலைப் புலிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் இரு பெண் சிப்பாய்கள் உட்பட ஒன்பது படையினர் கொல்லப்பட்டனர். மற்றும் ஏழு படையினர் படுகாயமடைந்தனர்.

உயிரிழந்த படையினரின் ஆயுதங்களைப் புலிகள் அள்ளிச் சென்றனர்.

முருங்கன் இராணுவப் பிரிகேட்டிலிருந்து 9 மணிக்குப் புறப்பட்ட இராணுவ பஸ் மீது தான் புலிகள் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தினர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வாழைத் தோட்டத்தில்

# மிதிவெடியில் சிக்கி ஒருவர்பலிஒருவர்காயம்

யாழ்ப்பாணம், டிச 3

நீர்வேலிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1 30 மணியளவில் வாழைத் தோட்டம் ஒன்றில் மிதிவெடி வெடித்ததில் தோட்டக்காரர் ஒருவர் உயிரிழந்தார். அவரின் உதவியாளர் படுகாயமடைந்தார்.

உதவியாளர் வாழைக்குத் தண்ணீர் கட்டிக் கொண்டிருந்த போது அவரது மண்வெட்டி மிதிவெடியில் பட்டதை அடுத்து அது வெடித்ததாகவும் —

அதனால் அவரும் அருகில் நின்ற தோட்டக்காரரும் படுகாயமடைந்ததாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

தோட்டக்காரரான — ஐந்து

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## பரமசாமிஐயர் குமாரசாமிஐயர்

(ஓய்வுபெற்ற ஓவிய ஆசிரியர்)

புத்தூர் மேற்கைச் சேர்ந்த பு. குமாரசாமிஐயர் 01-12-97 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அண்ணாச்சாமி ஐயரின் மருமகனும், சீதாம்பிகையின் கணவரும், ராஜேஸ்வரியம்மாவின் தந்தையும் மற்றும் ச. நாராயணசர்மாவின் மாமனாரும், ஜெகதீஸ்வர சர்மா, சீதாதேவி (லண்டன்), சுகந்தா தேவி, சபாரட்ணசர்மா, சோபிதா, வசுமதி ஆகியோரின் தாத்தாவும், சரணாதரனின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02-12-97 செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன இந்த அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ச. நாராயணசர்மா
(மருமகன்)

சிவன் கோயிலடி,
புத்தூர் மேற்கு,
புத்தூர்.

(51533)

## திருமதி சிவகாம்பிகை இளையதம்பி

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும். யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், தற்பொழுது B 14/3, மட்டக்குளி வீடமைப்புத்திட்டம், கொழும்பு—15 இல் வசித்து வந்தவருமாகிய திருமதி சிவகாம்பிகை இளையதம்பி 30-11-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் இளையதம்பியின் அன்பு மனைவியும் மற்றும் திருமதி விமலா அருணகிரிநாதனின் (ஓய்வு பெற்ற ரெலிபோன் இயக்குநர். யாழ்ப்பாணம்) அன்புத் தயாரும், சுப்பிரமணியம் அருணகிரிநாதனின் (மேலதிக நிர்வாக செயலாளர் பிரதி தபால்மா அதிபர் காரியாலயம், மட்டக்களப்பு) மாமியாரும், மணிவண்ணன் (Paper (Com Treders, Colombo), ஷாமினி ஜெயகுமார் (இந்தியா), நந்தகுமாரன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், மாதங்கியின் (இந்தியா) பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள 01-12-97 இல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதம்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
சண்முகம் ஜெயதாசன்
(பேறாமகன்)

இருபாலை, கோப்பாய்,
(51541)

## சந்தியாப்பிள்ளை திபூசியஸ்

(இளைப்பாறிய ஆசிரியர்)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சந்தியாப்பிள்ளை திபூசியஸ் 2-12-97 இல் பருத்தித்துறையில் காலமானார்.

இவர் தெல்லிப்பளையைச் சேர்ந்த குணலட்சுமியின் (லண்டன்) அன்புக் கணவரும், தமயந்தி (அமெரிக்கா), தயாளன் (லண்டன்), அகிலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற பொனிபஸ் (முன்னாள் முகாமையாளர். இலங்கை மின்சாரசபை), மற்றும் பிலோமினா, யோசப்பின், எடல்றீற்றா, கில்பேட் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று 3-12-97 மாலை 3 மணியளவில் பருத்தித்துறை முனை சென். தோமஸ் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சி சிவபாதம்
(ஜோர்ச்)
(மருமகன்)

''டோறனி வாசா'',
பீச் றோட்,
பருத்தித்துறை.

(51557)

## திருமதி சுப்பிரமணியஐயர் கௌரியம்பாள்

இருபாலையைப் பிறப்பிடமாகவும், ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணிய ஐயர் கௌரியாம்பாள் 02-12-1997 அன்று காலமானார்.

இவர் சுப்பிரமணிய ஐயரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நவரத்தினாம்பாள், முத்துக்குமாரசாமி (ப. நோ. கூ. ச. அச்சுவேலி), பர்வதராசாம்பாள்) முத்துச்சாமி, சிவானந்தமணி, சடாற்சராம்பாள் (தாதியர், பயிற்சிப் பாடசாலை போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சற்குணேஸ்வரன் (மணி ஸ்ரோர்ஸ், ஆவரங்கால்), விஷ்ணுகாந்தி (மாகாணப் பிரதிப் பணிப்பாளர், சுகாதாரசேவைகள் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3-12-97) காலை 10 மணிக்கு ஆவரங்கால் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. சற்குணேஸ்வரன்
(மகன்)

மணி ஸ்ரோர்ஸ்,
ஆவரங்கால்.

(51553)

## காவலரண் நீக்கப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 3

நீர்வேலிச்சந்தியில் கடந்த மாத இறுதிப்பகுதியில் இனம் தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்ட இராணுவகாவலரண்களை அப்பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் கடந்த சனியன்று முற்றாகவே நீக்கியுள்ளனர்.

## இணுவிலில் மினி சூறாவளி

இணுவில் கிழக்குப் பகுதியில் நேற்று நண்பகல் வேளையில் மினி சூறாவளி ஒன்று வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் இணுவில் காரைக்கால் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் கொட்டகைக் கிடுகுகள் தூக்கி வீசப்பட்டன; அருகிலுள்ள மரக்கொப்புகளும் முறிந்து வீழ்ந்தன.

இதேவேளை நேற்று முழு நாளும் குடாநாட்டில் மப்பும் மந்தாரமுமான கால நிலை நிலவியது. இடையிடையே மழையும் பெய்து கொண்டிருந்தது. (உ-4)

## சீருடைத்துணி விநியோகம்

குருநகர், டிச. 3

யாழ்ப்பாணம் நல்லூர்க் கல்விக்கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரையுள்ள வகுப்புக்களில் கற்கும் பெண் பாலர்களுக்கான — இவ்வாண்டுக்குரிய — மிகுதிச் சீருடைகள் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வைத்து வழங்கப்படும்.

உரிய பாடசாலை அதிபர்கள் பதவி முத்திரையுடன் சமுகம் அளித்து இதனைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச. காங்கேயன் அறிவித்துள்ளார். முன்னர் பற்றுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளாத அதிபர்களுக்கு அன்றைய தினம் பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ-51)

## அனுமதி அட்டைகளை பெறலாம்

குருநகர், டிச. 3

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி. சி. ஈ. (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை மாணவர்களுக்குரிய பரீட்சை அனுமதி அட்டைகள் முத்திரைச் சந்தியில் இயங்கும் யாழ். — நல்லூர் கல்விக் கோட்டத்தில் உள்ளன. இதுவரை இவற்றை எடுத்துச் செல்லாத பாடசாலைகள் உடன் அவற்றை எடுத்துச் செல்லுமாறு யாழ். — நல்லூர் கோட்டக் கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது. (உ-51)

## தொழில்நுட்ப பரீட்சை

கொழும்பு, டிச. 3

1997 ஆம் ஆண்டு தொழில் நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை இம்மாதம் 8, 9, 10 ஆம் திகதிகளில் சகல தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் நடைபெறும்.

தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் இந்தப் பரீட்சையை நடத்துகின்றது.

பரீட்சார்த்திகள் சம்மந்தப்பட்ட கல்லூரி அதிபர்களிடம் இருந்து அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு திணைக்கள பரீட்சைப் பகுதி கேட்டுள்ளது. இத்திணைக்களம் முதல் தடவையாக இப் பரீட்சையை நடத்துவது குறிப்பிடத்தக்கது. (உ-9)


## லொறிச் சேவைக்கு விண்ணப்பம்

காங்கேசன்துறை துறைமுகத்தில் இருந்தும், பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்தும் பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு லொறி உரிமையாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறிப்பிட்டளவு லொறிகள் தேவைப்படுவதால் முற்கூட்டிய பதிவுகளுக்கு நிரந்தர முன்னுரிமை வழங்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்
212, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2240)


## கண்ணீர் அஞ்சலி

### கதிர்காமத்தம்பி சிவநாதன்

(உரிமையாளர், ராணி பேக்கரி, பருத்தித்துறை)

கதிர்காமத்தம்பி சிவநாதன் (உரிமையாளர், ராணி பேக்கரி) 02-12-97 இல் காலமாகி விட்டார். இவர் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் வடமராட்சிக் கிளை ஆரம்ப கால அங்கத்தவருமாவார்.

இவரின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு வடமராட்சிக் கிளை அங்கத்தவர்கள் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

வடமராட்சிக் கிளை உறுப்பினர்கள்
யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
நெல்லியடி.

(சி/2238)

## கண்ணீர் அஞ்சலி

### கதிர்காமத்தம்பி சிவநாதன்

(உரிமையாளர், ராணி பேக்கரி, பருத்தித்துறை)

கதிர்காமத்தம்பி சிவநாதன் (உரிமையாளர், ராணி பேக்கரி) 02-12-97 இல் காலமாகிவிட்டார். இவர் யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் வடமராட்சிக் கிளை ஆரம்ப கால அங்கத்தவருமாவார்.

இவரது இழப்பினையிட்டு கலங்கி நிற்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மா. பே. உ. சங்கம்,
39, 3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(சி/2239)

# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை இராசரெத்தினம்

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை இராசரெத்தினம் 2-12-97 இல் அகாலமரணமானார்.

இவர் இலக்ஷ்சுமிப்பிள்ளையின் அன்பு மனைவியும், பவானி (சுவிஸ்), அருளானந்தம் (சுவிஸ்), கருணாகரன் (சுவிஸ்), தயாளினி (கனடா), மோகன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ஸ்ரீ ரங்கனின் (சுவிஸ்), அன்பு மாமனாரும், அபிசாந், சுபிசாந் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (3-12-97) நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் நீர்வேலி குடும்பமயானத்தில் தகனஞ் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. கிருஷ்ணானந்தன்
(ராசன்)
(பவானி ஸ்ரோர்ஸ் நீர்வேலி)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(51558)

## நாகமுத்து முருகேசு

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட இளைப்பாறிய ஆசிரியர் நாகமுத்து முருகேசு 02-12-97 செவ்வாய்க்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கிருஷ்ணமூர்த்தி, யோகாம்பிகையின் அன்புத் தந்தையாரும் பொன்னம்மாவின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் (04-12-97) நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணி அளவில் நடைபெறும். இவ் வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மு. கிருஷ்ணமூர்த்தி
(மகன்)

பெருங்குளம் பிள்ளையார் கோயிலடி,
கல்வயல், சாவகச்சேரி.

(51550)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதசார்பற்ற அரசு நிறுவ மூப்பனாரும் முயற்சி

சென்னை, டிச 3

மத்தியில் நிலையான மதச்சார்பற்ற புதிய அரசை அமைக்க தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனார் முயற்சி செய்து வருகின்றார் என தமிழ் நாடு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் சோ. பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

குஜ்ரால் அரசு இராஜினாமாச் செய்துள்ளது. இந் நிலையில் மூப்பனார் டில்லியில் முகாமிட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றித் தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகின்றார். அவரது முயற்சியால் நல்ல ஓர் அரசு அமையும்.

இடைத்தேர்தல் வருவதை எவரும் விரும்பவில்லை. அப்படித் தேர்தல் நடந்தால் மக்களின் வரிப்பணத்தில் ஆயிரம் கோடிரூபா வீணாகச் செலவாகி விடும்,

எனவே நிச்சயமாக மக்களவைத் தேர்தல் இப்போது வராது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-9)

# பெரும்பான்மை பலத்தை திரட்டும் முயற்சி இன்னும் கை கூடவில்லை!

## ஆதரவு திரட்டுவதில் கட்சிகள் தொடர்ந்து ஈடுபாடு

புதுடில்லி டிச. 3

இந்தியாவில் ஆட்சி அமைக்கும் முயற்சியில் பெரும்பான்மை பலத்தைத் திரட்ட பாரதீய ஜனதா காங்கிரஸ் ஆகியவை ஈடுபட்டுள்ள போதிலும் இதுவரை இவற்றின் முயற்சிகை கூடவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பெரும்பான்மை வலுவைப் பெறுவதற்கான ஆதரவை இன்னமும் எந்த ஒரு கட்சியிலும் திரட்ட முடியவில்லை என பாரதீய ஜனதா எம்.பியான ராம் நாயக் தெரிவித்துள்ளார்.

எந்தவித உடன்பாடும் ஏற்படவில்லையானால் இடைத்தேர்தல் தவிர்க்க முடியாதது ஆகிவிடும் என அவர் மேலும் கருத்து வெளியிட்டார்.

இதே சமயம் பாரதீய ஜனதாவுடன் சில காங்கிரஸ் உறுப்பினர்கள் தொடர்பு கொண்டு பேசி வருவதால் இன்னமும் கூட சிறிது நம்பிக்கை இருப்பதாக சிவசேனைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் இந்நியைநாடாளுமன்றம் மறுதேதி குறிப்பிடப்படாமல் நேற்று ஒத்தி வைக்கப்பட்டது. (இ-9)


## 4 ஆம் ஆண்டு நன்றி நினைவஞ்சலி

(03-12-1993 — 03-12-1997)



**LOURDES RAYMOND MUTHIAH**

**லூர்து ரேமன்ட் முத்தையா**

"உம்மை எமக்கு ஈந்தளித்த இறைவன்
தம்முடன் என்றும் உம்மை வாழவைப்பார்"

"Oh! for the touch of a vanished hand
Oh! for the sound of a voice that is still"

'நித்திய இளைப்பாற்றினை இவருக்கு அளித்தருளும்'

உமது நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

67/1, ரெம்பிள் றோட்,
யாழ்ப்பாணம். (சி/2229)


## ஹூட்டு அகதிகள் படுகொலை விசாரணை

கின்சாஸா, டிச. 3

கொங்கோ குடியரசில் றுவாண்டாவின் ஹூட்டு இன அகதிகள் படுகொலை செய்யப்பட்டது தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்குமாறு ஐ. நா. உத்தரவிட்டுள்ளது. (இ)

## இயன் ஸ்மித்தின் காணி பறிமுதல்

ஹராரே, டிச. 3

சிம்பாப்வேயின் (முன்னர் ரொடீசியா) முன்னாள் பிரதமர் இயன் ஸ்மித் உட்பட பலருடைய காணிகள் சுவீகரிக்கப்பட்டு கறுப்பு இன விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருகின்றன.

கூடுதலாக வர்த்தக நோக்கங்களைக் கொண்ட வெள்ளை இன விவசாயிகளின் காணிகளே பறிமுதல் செய்யப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ)

## தமிழர் விடுதலைப்படை உறுப்பினர் கைது!

சென்னை, டிச. 3

தமிழர் விடுதலைப்படை அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று நம்பப்படும் 7 பேரை தமிழ்நாடு பொலீஸார் கைது செய்தனர்.

பெரும்பலூர் மாவட்டம், வாரியங்காவில் வழக்கறிஞர் ஒருவரின் வீட்டில் நடந்த கொள்ளை, ஸ்ரீமுஷ்ணம் இரட்டைக் கொலை ஆகிய சம்பவங்கள் தொடர்பாக இவர்கள் தேடப்பட்டு வந்தார்கள் என்று கூறப்படுகிறது. (இ-9)

## பீஹாரில் பெரும் மழை: அறுவர் பலி!

புதுடில்லி, டிச. 3

பீஹார் மாநிலத்தின் கயா மாவட்டத்தில் பெய்த பெருமழையால் குறைந்தது ஆறு பேர் இறந்து விட்டார்கள். பலர் காயமுற்றனர். ஆயிரக்கணக்கான வீடுகளும் பயிர்களும் நாசமாகியுள்ளன. (இ-9)


## நத்தார் புதுவருட விசேடங்களுக்கு உரிய

★ சோடனைப் பொருள்கள்
★ விளையாட்டுப் பொருள்கள்
★ கால்பந்து கைப்பந்து வகைகள்
★ பாடசாலை உபகரணங்கள்
★ குடைகள்
★ சுடுநீர் போத்தல்கள்
★ பவுடர் வகைகள்
★ எசென்ஸ் வகைகள்

மேலும் பல

**ராஜு ஸ்ரோர்ஸ்**

67, 69 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(51551)



நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் எமது

**புகைப்படச் சேவையினை**

ஆரம்பித்துள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

- தேசிய அடையாள அட்டைப் புகைப்படங்கள் (அரச அங்கீகாரம் பெற்றவர்கள்)
- விசேட அடையாள அட்டைப் புகைப்படங்கள்
- அஞ்சல் அடையாள அட்டைப் புகைப்படங்கள்
- இவற்றுடன் சகல அளவுகளிலும் படங்களை பெரிதாக்கிக் கொள்வதற்கும்
- தெளிவான போட்டோ ஸ்ரட் பிரதிகளுக்கும்
- அடையாள அட்டை போன்ற முக்கிய ஆவணங்களை பாதுகாப்பான முறையில் கவரிட்டுக் கொள்வதற்கும்

**'சித்ராலயா'**

172, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(51547)



## மறைந்தும் மறையா "மதி"



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 03 | 03 |
| 09 | 11 |
| 1953 | 1997 |

**அமரர் சின்னத்துரை மதியாபரணம்**

(எழுது வினைஞர் — தரம் 1 — யாழ். பல்கலைக்கழகம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்
கழக (நீல) வானத்தில்
தாரகைகள் மத்தியிலே
தண்ணொளி பரப்பியே
உலா வந்த எங்கள்
மதி நீ மறைந்து விட்டாயாம்
ஆமாம் மரணமுகில் மதியுனை
மறைத்து விட்டாலும்
எங்கள் மனங்களெனும்
வானத்தில் என்றும்
மறையா மதியாய்
நீயிருப்பாய் நண்பா!

உன் ஆத்ம சாந்திக்காய்
இறையிடம் (எம்) இறைஞ்சல்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக
எழுதுவினைஞர் தொழில் நுட்ப அலுவலர்
ஒன்றியம்.

(51540)



மற்றுமொரு புதிய ஆரம்பம்:

## புதிய விஞ்ஞானக் கல்லூரி

மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

**O/L 10, 9 வகுப்புக்கள்**

ஆரம்பம்: 06 - 12 - 1997
சனிக்கிழமை காலை 8.00 மணி

| | |
|---|---|
| கணிதம் | — திரு. ஸ்கந்தா |
| விஞ்ஞானம் | — திரு. தேவதாஸ் |
| தமிழ் | — பிரபல ஆசிரியர் |
| சமயம் | — செல்வி சுகந்தி |
| சமூகக்கல்வி | — திரு. ஐங்கரன் |
| ஆங்கிலம் | — திரு. ரவி |
| வர்த்தகம் | — திரு. சுபேஸன் |

03-12-97 (புதன்) முதல் அனுமதிகளைப் பதிவு செய்து கொள்ளவும்.

(51544) - நிர்வாகி



D C S
DATA CONNECTION SYSTEMS (PVT) LTD

## COMPUTER TRAINING CENTRE

126/2 Palaly Road, Thirunelvely, Jaffna.

**D C S - Computer Diploma (1997/98)**

மேற்படி கற்கைநெறி 1997 டிசம்பர் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. மாணவர்கள் பயிற்சி நிறுவனத்தில் தம்மைப் பதிவு செய்து கொள்வதுடன், மேலதிக விவரங்களையும் பெற்றுக் கொள்ளவும்.

பதிவு செய்வதற்கான முடிவு திகதி 10 - 12 - 1997

நிர்வாக அலுவலர்
D C S

[51537]


07, இரத்தினம் ஒழுங்கை, ... யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### உடன் விற்பனை

கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ணா வீதியில் இராமகிருஷ்ணா பாடசாலைக்கு அருகில் 4½பரப்புக் காணியுடன் 6 அறைகள் கொண்ட பெரியவீடு மற்றும் வீட்டுத்தளபாடங்கள், ரீ.வீ, டெக், ஜெனரேட்டர் உட்பட உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: சுரேஸ் கடை. கோண்டாவில் சந்தி, கோண்டாவில்கிழக்கு (பொ. மனோரஞ்சிதம், சந்திரன் கோண்டாவில் கிழக்கு). [51452]

பிறிமா புறோயிலர் குஞ்சுகள், பிறிமா பிறவுண், வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள், சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [51489]

### திருமணசேவை

எங்களிடம்எல்லா மதத்திற்கும் எஞ்ஜினியர், எக்கவுண்டன், ஆசிரியர் மணமக்கள் உண்டு. குறிப்பு, புகைப் படத்துடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (51511)

1963 செவ்வாய்க் குற்ற மற்றவர் மிருகசீரிடம் நட்சத்திரம் உள்ள எலற்றி சனாக கொழும்பில் கடமை புரியும் மணமகனுக்கு அழகிய பெண் தேவை, குறிப்பு, படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (51529)

1959 8 இல் செவ்வாய்க் குற்றம் உள்ள மிருகசீரிடம் நட்சத்திரம், கடை முதலாளி மணமகனுக்கு அழகிய பெண் தேவை, குறிப்பு, படத்துடன் தொடர்பு கொள்ளவும். துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (51530)

### தவறிவிட்டன

செல்லத்துரை சத்திய பாமா ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, பாஸ் ஆகியவை பேரிஸுடன் யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறை என்னும் விலாசத்திற்கு அனுப்பி உதவவும். [51524]

கைதடி ஆஸ்பத்திரிக்கும், தச்சன் தோப்புக்கும் இடையில் ஒரு பவுண் நிறையுடைய கைச்சங்கிலி கடந்த சனிக்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தச்சன் தோப்பு, இராசமணி பாலசிங்கம், வீட்டில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [51519]

### யாழ்ப்பாணத்தில்

அந்த ஆறு மாதங்கள் உங்களது கதை வீரகேசரியில் பிரசுரமாகி உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களால் வாசிக்கப்பட்டது. 275 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியது. ரூபா 50. [51495]

### விற்பனைக்கு

200 - 6971, 16 - 8962 இலக்கமுடைய இரண்டு ஓட்டோ வாகனங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு; V. கிருஷ்ணபிள்ளை, காட்டுவளவு கந்தசாமி கோயிலடி. மீசாலை கிழக்கு, மீசாலை. [51486]

### இறைச்சிக் கோழி

புறோயிலர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: R, S. K. கோழிப்பண்ணை, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். [51283]

## சாரணிய வழிகாட்டுநர் கூட்டம்

## GIRL GUIDEs GUIDERS MEETING

மேற்படி கூட்டம் 06—12—97 சனிக்கிழமை காலை 9 மணிக்கு யா/வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும். பயிற்சி பெற்ற வழிகாட்டுநர்களும் புதிதாக இணைய விரும்பும் ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்கும்படி சாரணிய பதில் மாவட்ட ஆணையாளர் திருமதி கி. சிவராஜாவினால் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

பொன்னாலை,
சுழிபுரம்.

(51532)

## நீங்கா நினைவில் ஈராண்டு நிறைவு



மலர்வு: 1977 — 12 — 27

உதிர்வு: 1995 — 12 — 10

### செல்வி கமலாசனி புஸ்பரத்தினம் [கிளி]

[A/L 97 ஆம் ஆண்டு கலைப்பிரிவு மாணவி
யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி]

திதி: 1997—12—03

உனது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

திருநெல்வேலி வடக்கு.
யாழ்ப்பாணம்.

(சி/ 2223).

## 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 01 — 06 — 1901

ஆண்டவன் அடியில்: 03 — 12 — 1982

### அமரர் சின்னத்தம்பி தில்லையர்

(தெல்லிப்பளை பிரபல சட்டத்தரணியும்,
சமாதானநீதிவானும்,
இலங்கை இளைப்பாறிய சிவில் சேவையாளரும்)

நேசத்தில் எல்லாமாய் நிறைந்து
பாசப் பிணைப்புடன் எம்மை
வழிநடத்திய ''பப்பா''
உங்கள் நினைவுகள்.
காலங்கள் நகர்வதால் மறந்திட இல்லை.

உங்களைத் தினம் போற்றும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்; பூட்டப்பிள்ளைகள்.

பெரிய மதவடி,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.

(49855)

## 31 ஆம் நாள் நினைவுப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### திருமதி கனகாம்பிகை சண்முகலிங்கம்

சிவபூமியில்: 30—03—1943

சிவலோகத்தில்: 03—11—1997

வீட்டுக்கிருத்தியம் 03-12-1997 புதன்கிழமை பகல் 10 மணி

பொட்டோடும் பூவோடும்
பூவுலக வாழ்வை நிறைவாக்கிய புண்ணியவதியே!
இனி எங்கே காண்பேன்?

இன்றைய நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அன்னாரது மரணச்சடங்கின் போது கலந்து சிறப்பித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

திரு சி. சண்முகலிங்கம்
(கணவன்)
திருமதி சி, சிவக்கொழுந்து
(மாமியார்)

305, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி/2225)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

# மீள் கேள்வி அறிவித்தல்

## 1998 ஆம் ஆண்டு

## இறைச்சிக்கடைகள், சந்தைகள் குத்தகை

கேள்விப்பத்திரம் வழங்கல் - 1997 - 12 - 17 ஆம் திகதி பி.ப. 12-00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றல் - 1997 - 12 - 18 ஆம் திகதி பி. ப. 1-00 மணி வரை
கேள்விப்பத்திரம் திறத்தல் - 1997 - 12 - 18 ஆம் திகதி பி. ப. 2-30 மணி

| குத்தகையின் தன்மை | கடையின் மாத வாடகை | கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| மானிப்பாய்ப் பட்டினம்: | | | | |
| 1. ஆட்டிறைச்சிக்கடை (சந்தை) | 250/- | 1000/- | 100/- | 40,500/- |
| 2. கருவாட்டுக்கடை (மானிப்பாய் சந்தை) | 100/- | 500/- | 100/- | 1,500/ |
| மானிப்பாய் கிராமம்: | | | | |
| 1. காக்கைதீவுச் சந்தை (துவிச்சக்கரவண்டி நிறுத்தல் கட்டணம் உட்பட) | — | 1000/- | 100/- | 36,000/- |
| 2. ஆட்டிறைச்சிக்கடை நவாலி பிரசாத் சந்தை | 250/- | 1000/- | 100/- | 10,100/- |
| 3. ஆட்டிறைச்சிக்கடை சாவற்கட்டு சந்தை | 250/- | 1000/- | 100/- | 10,000/- |
| 4. கருவாட்டுக்கடை (சாவற் கட்டு சந்தை) | 100/- | 500/- | 100/- | 1,250/- |

மேலதிக விவரங்களை அலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பிரதேசசபை எல்லைக்குள் எனது அனுமதியின்றி எவரும் இறைச்சி விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

**து. வைத்திலிங்கம்,**
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை.

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமைச் செயலகம்,
நகரமண்டபம், மானிப்பாய்.
01 - 12 - 1997

(சி-2228)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

புது வருடத்தில் ஆரம்பமாகவிருக்கும் முற்றிலும் பெண்களால் நடத்தப்படவுள்ள அழகு சாதனப் பொருள்கள் விற்பனை செய்யும் கடைக்கு.

★ பெண் காசாளர்
★ பெண் விற்பனையாளர்
தேவை

முழு விவரங்களுடனும் எதிர்வரும் 06—12-97 இல் கீழ்க்காணும் முகவரிக்கு சமுகம்தரவும். வீடியோப் படப் பிடிப்புப் பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம்.

(3 மைல் சுற்றாடலில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

**வீடியோ கலாமினி**
[மத்திய சந்தை உட்புறம்]
அச்சுவேலி.

[51531]



# YARL HALL கல்வி நிலையம்
(திருமறைக் கலாமன்றம் முன்பாக)

## புதிய கல்வியாண்டு - 1998

புதிய வகுப்புகள் ஆரம்பம்
**05 - 12 - 97**
வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி
ஆண்டு 4 முதல் O/L வரை
எமது வழமையான தனித்துவம்மிக்க ஆசிரியர் குழுவினர்

(51515)


# சர்வதேச ஊனமுற்றோர் தினம்:

# கட்டுரை, வினாவிடை போட்டிகளில் பரிசு பெற்றோர் விவரம்

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட, கட்டுரை வினாவிடைப் போட்டி பரிசளிப்பு விழா எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை கொழும்புத்துறை வீதியில் உள்ள ஊனமுற்றோர் புனர் வாழ்வுச் சங்க நிலையத்தில் நடைபெறும்.

அதே சமயம் இன்று 3 ஆம் திகதியிலிருந்து 6 ஆம் திகதி வரை யாழ். வியோ கழகம் கொடித்தினமும் நடத்துகிறது.

**கட்டுரைப் போட்டி**

முதலாம் பரிசு — மோசஸ். சேந்தன்சத்தியதீபன்-பரியோவான் கல்லூரி.

இரண்டாம் பரிசு — கிறிஸ்ரியன் இம்மானுவேல் மேரியன் கப்றேகன்-புனித என்றியரசர் கல்லூரி, இளவாலை.

மூன்றாம் பரிசு - ந. மாதவன்-ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயம், இடைக்காடு.

ஆறுதல் பரிசு பெறுவோர் விவரம்:

1. ஜெயகாந்தினி சண்முகராசா—திருக்குடும்பக் கன்னியர் மடம்
2. எட்வேட் றெனோல்ட் — சம்பத்திரிசியார் கல்லூரி.
3. எஸ். றாஜகுமாரி — பளை மத்திய கல்லூரி.
4. சுமித்திரா குமாரசாமி — சாவகச்சேரி இந்துக் கல்லூரி
5. வேலும் மயிலும் நந்தக்குமார் — ஹாட்லிக் கல்லூரி
6. அ. யோ. தனேந்திரன் — சம்பத்திரிசியார் கல்லூரி
7 ந. நலறாஜி — உசன் இராமநாதன் வித்தியாலயம்
8 அ. கார்த்திகா—திருக்குடும்பக் கன்னியர்மடம்
9. கா. உதயகலா — உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்
10. செல்வம் பதில்ராஜா — உரும்பராய் இந்துக்கல்லூரி.
11. சைறின்ஆக்—சம்பத்திரிசியார் கல்லூரி.
12. யோகராஜா சதிபா— இந்து தமிழ் பெண்கள் பாடசாலை.
13. கனகரத்தினம் மயூரதி —மகளிர் கல்லூரி, சாவகச்சேரி.

**வினாவிடைப் போட்டி**

1 ஆம் பரிசு — வீ. புஸ்பவேணி. —திருக்குடும்ப கன்னியர் மடம்.

2 ஆம் பரிசு— சோ. கலைபாரதி— சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

3 ஆம் பரிசு — ப. திருஸாந்தி.

ஆறுதல்பரிசுபெறுவோர்;

1. பூபதி, — கூட்டுறவு பயிற்சிக் கல்லூரி, யாழ்,
2. ஸ். மேரிசிங்யூ கௌசல்யா, —சென், அன்ரனீஸ் பாடசாலை.
3. கனலட்சுமி — கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.
4. சிறில் டினாமேரி,— சென். அன்ரனீஸ்பாடசாலை
5. ம.தர்சிகா, —கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்,
6 அ.றொக்ஷியா,— சென் அன்ரனீஸ் பாடசாலை.
7. கு. கஜநிதி, விக்ரோறியாக் கல்லூரி,
8. சுதாமதி, — நாவற்குழி மகாவித்தியாலயம்.
9. பே.நிவேதா, வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை
10 ந. மரின்நிலானி—சென் அன்ரனீஸ் பாடசாலை.
11. பே. கஸ்ரோ, மத்திய கல்லூரி.
12. ம. திருபாலினி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
13. வே. மரிய கொண்சி— சென்.அன்ரனீஸ் பாடசாலை
14. கா. காந்தபாலன் — சாவகச்சேரி இந்துக்கல்லூரி
15. ச. சுலக்சனா — 223, கலைமகன் வீதி, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.


# கண்ணீர் அஞ்சலி

## தம்பையா சின்னத்துரை
(மாசிவன் நீர்வேலி)

நீர்வேலி செல்லக் கதிர்காம ஆலய புனருத்தாரண கும்பாபிஷேக திருப்பணிகளை முன்னின்று செய்து அரும்பணிகள் ஆற்றிய தம்பையா சின்னத்துரை அவர்களின் திடீர் மறைவை இட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அருள்மிகு செல்லக் கதிர்காம
தேவஸ்தானம்
நீர்வேலி.

(51531)



# ''பருத்தித்துறை நகராட்சி மன்றம்
# மாட்டிறைச்சிக் கடைக் குத்தகைக்கான
# மீள் கேள்வி அறிவித்தல்-1998

மேற்காட்டிய குத்தகையின் சார்பில் 01-01-1998 ஆம் திகதி தொடக்கம் 31-12-1998 ஆம் திகதி வரைக்கான காலப் பகுதிக்குரிய கேள்விகள் 16-12-1997 ஆம் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் பருத்தித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் 15-12-1997 ஆம் திகதி பிற்பகல் 3-30 மணிவரை மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் ரூபா 150/-ம் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் ரூபா 1500/-ம் பணமாகச் செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களை இணைப் பிரதிகளில் ''செயலாளர், நகராட்சி மன்றம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டுத் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''மாட்டிறைச்சிக் கடைக் குத்தகைக்கான கேள்வி —1998'' எனத் தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடவேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் 16-12-1997 ஆம் திகதி பிற்பகல் 12-30 மணிக்குத் திறக்கப்படும்போது கேள்விக்காரரோ அல்லது அவரால் அனுமதிக்கப்பட்ட பிரதிநிதியோ பிரசன்னமாயிருக்கலாம்.

இது சம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விவரங்களையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ந. சோமசுந்தரம்,
செயலாளர்,
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை,
01-12-1997.

(சி/2230)



# 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



## அமரர் க. மார்க்கண்டு
திதி: 03–12–1997

வாடாத மல்லிகையாய் மணம் வீசும்
எந்நாளும் பள்ளிப்பருவத்தில் துள்ளித்திரிந்தாயே
அதனை நான் கண்டு மகிழ்ந்தேனே
அதன் பின் கவலையைத்தான் கண்டேன் ஐயா!
உன்னம்மா நிற்க கெதியற்றவளாய்
நிலையற்றுப் போனாளே நீ சேயாக
மீண்டும் வந்து இக்கெதியை பாரனையா?

உன் ஆத்மா சாந்தியடைய விநாயகரை வேண்டுகிறோம்.

உன் பிரிவால் துயருறும்:
அம்மா, நண்பர்கள்.

'தேவபவனம்'
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.

(51422)



# வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி.
# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைக்கான கேள்வி பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து கோரப்படுகிறது. கேள்விகள் 11-12-1997 ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் அன்றைய தினமே நண்பகல் 12-00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி விசேட ஆணையாளர், வலி கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி என்ற முகவரிக்கும், இணைப் பிரதி பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் 11-12-1997 ஆம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் கேள்வியின் பெயர் எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.

| வேலையின் பெயா | வைப்புப பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|
| மாட்டிறைச்சிக் கடை அமைத்தல் | 1000.00 | 250 00 |

மேற்படி வைப்புப் பணத்தையும், கேள்விப் படிவக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 09-12-1997 ஆம் திகதி பகல் 12-30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகத்தினால் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

கதிரவேலு கேதீஸ்வரன்,
விசேட ஆணையாளர்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
01-12-1997.

(சி-2231)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனமுற்றோர் வாழ்வை மேம்படுத்துவோம்

இன்று சர்வதேச ஊனமுற்றோர் தினம். இதனை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரமாகிறது.

உலகெங்கும் இன்று ஊனமுற்றோர் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. ஐக்கிய நாடுகளின் நிறுவனம் மனித உரிமைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் 1993 இல் இத் தினத்தைத் தேர்ந்தெடுத்தது.

இந்நாள் ஊனமுற்றவர்களின் பிரச்சினைகள், ஆற்றல், அவர்களின் உரிமைகள் தேவைகள் பற்றி கிராம மட்டம் முதல் சர்வதேச மட்டம் வரை விவாதிப்பதற்கும் அவற்றைப் பற்றி பகிரங்கப்படுத்துவதற்கும் உதவும்.

இத் தினத்தைக் கொண்டாடுவதன் நீண்டகால நோக்கங்கள் வருமாறு:

★ தொழில், கல்வி முதலியவற்றில் மற்றவர்களுக்கு சமமான ஓர் அந்தஸ்தை ஊனமுற்றவர்களுக்கு உண்டாக்குதல்.

★ அவர்களைப் பாதிக்கின்ற திட்டங்கள், செயற்பாடுகளில் அவர்களும் பங்குபற்றக் கூடிய வாய்ப்புகளை உண்டாக்கிக் கொடுத்தல்.

★ ஊனமுற்றவர்களுக்கெதிராக நடைபெறும், ஓரங்கட்டுதல், வன்முறைகள், வைதல் முதலியவற்றை வெளிக்கொணர்ந்து அவற்றை எதிர்காலத்தில் தவிர்ப்பது.

ஊனமுற்றோர் தினம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பண உதவி செய்யும் தினமாக மாத்திரம் அமையாது, அவர்களின் சமூக வளர்ச்சிக்கும், அவர்களை சமமானவர்களாக ஏற்றுக் கொள்வதற்கும் உதவ வேண்டும். அது மட்டுமன்றி ஊனம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கும் பிரகடனம் எடுத்துக்கொள்ளும் நாளாக அமைய வேண்டும்.

ஊனம் உண்டாவதற்குப் பல காரணங்கள் உண்டு. பெரும்பாலானவை தடுக்கக் கூடியவை.

சிலர் பிறக்கும்போதே ஊனமுற்றவர்களாகப் பிறக்கிறார்கள். சில பிறப்புக் குறைபாடுகள் பெற்றோரின் குடும்பங்களில் இருந்தால் குழந்தைகளுக்கு இக்குறைபாடு ஏற்பட இடமுண்டு. இப்படியான குறைபாடு உள்ள குடும்பங்களில் உள்ளவர்கள், தங்கள் உறவினர் அல்லாதவர்களை திருமணம் செய்வது உகந்தது.

மோங்கல் (Mongolism) என்று குறிப்பிடப்படும் பிறப்புக்குறைபாடு பெரும்பாலும் முப்பது வயதைத் தாண்டிய பெண்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்படுகிறது. பெண்கள் 30 வயதுக்குள் திருமணமாகி குடும்பத்தை நிறைவு செய்து கொள்வதன் மூலம், மோங்கல் பிள்ளைகள் பிறப்பதைத் தடுக்கலாம்.

கர்ப்பகாலத்தில் தாயின் உணவில் சில நுண்ணுயிர்ச் சத்துக்கள் (Micronutrients) குறைவாக இருந்தாலும் பிறப்பு குறைபாடுள்ள குழந்தைகள் பிறக்கலாம். தாயின் உணவில் அயோடின் குறைபாடு இருப்பின் பிறக்கும் குழந்தைகளில் —

★ தாமதித்த வளர்ச்சிப் படிகள்.

★ செவிப்புலனற்று பேச முடியாத தன்மை

★ வாக்குக்கண்

★ குள்ளத்தன்மை

★ நிற்பதிலும் நடப்பதிலும் கஷ்டம்

★ மூளை வளர்ச்சிக் குறைபாடு

முதலிய அறிகுறிகளைக் காணலாம். தாய் கர்ப்ப காலத்தில், போதிய சிறு மீன், முட்டை முதலிய உணவுகளை உண்பதாலும் அயோடின் கலந்த உப்பை சமையலுக்குப் பாவிப்பதாலும் இக்குறைபாடு ஏற்படாது தவிர்க்கலாம்.

போலிக் அமிலம் (Folic - Acid) எனப்படும் உயிர்ச்சத்து பெண்களின் உணவில் குறைவாக இருந்தால் மூளை - முள்ளந்தண்டில் குறைபாடுள்ள குழந்தைகள் பிறக்கலாம். போலிக் அமிலம் பச்சை இலைகளில் நிறைய உண்டு. இதில் முக்கியமானது என்னவென்றால் இந்தக் குறைபாடு கர்ப்பமாகி முதல் மூன்று மாதங்களில் ஏற்பட்டுவிடுகின்றது. ஆகவே, குழந்தைகளில் இந்தக் குறைபாட்டைத் தவிர்க்கவேண்டுமானால் கர்ப்பமாகும் நிலையில் உள்ள சகல பெண்களும் நிறைய பச்சை இலைவகைகளை தங்கள் உணவில் சேர்க்க வேண்டும்.

ஊனமடைய

நோய்களுக்கு காரணம்

பல நோய்கள் ஊனம் உண்டாவதற்கு அடிப்படைக் காரணமாக இருக்கின்றன. கடந்த தசாப்தங்களில் போலியோ பல குழந்தைகளை ஊனப்படுத்தியது. கடந்த சில வருடங்களாக இந்நோய் உண்டாவது குறைந்துள்ளது. இதற்குக் காரணம் போலியோ தடை மருந்துதான். ஆனால் இந்நோயை முற்றாக ஒழித்துவிட்டோம் என்று சொல்ல முடியாது. இக்கிருமி எப்பொழுதும் தாக்கலாம். ஆகவே நாம் இப் போலியோ தடுப்பு மருந்துகளைத் தொடர்ந்து கொடுக்க வேண்டும்.

வளர்ந்தவர்களுக்கு ஊனத்தைக் கொடுக்கும் ஒரு நோய் சலரோகம். சலரோகம் தானாக ஊனத்தைக்கொடுக்காவிட்டாலும் அதன் சிக்கல்கள் ஊனத்தைக் கொடுக்கும். இதில் முக்கியமானது காலை அகற்றவேண்டியநிலை. இந்த நிலையிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு ஒவ்வொரு சலரோக நோயாளியும் தனது பாதங்களைக் கவனமாக பாதுகாக்க வேண்டும். நகங்களை வெட்டும் பொழுது மிகவும் அவதானமாக வெட்ட வேண்டும்.

காலில் ஏற்படும் மிகச் சிறிய காயங்களிலிருந்துதான் ஆரம்பமாகி காலை அகற்ற வேண்டிய நிலைக்குப் பலர் தள்ளப்படுகிறார்கள்.

வயோதிப காலத்தில்

பெரும்பாலான ஊனமுற்றவர்களை வயோதிபத்தில் தான் பார்க்கிறோம். இவர்களுக்கு இருக்கும் முக்கியமான குறைபாடுகள்:

★ கண்பார்வை குறைபாடு

★ காது கேளாத நிலை

★ குருதிச் சோகை

★ பாரிசவாதம், முறிவு, மூட்டு வியாதிகளினால் நடக்க முடியாத நிலை

★ உணவை சப்ப முடியாத நிலை

முதியோரில் மூன்றில், இரண்டு பகுதியினர் பார்வைக் குறைபாட்டுடன் உள்ளார்கள். அவர்ரளில் பலர் கண்ணாடி பாவித்தபோதும், அது பல வருடமாக மாற்றப்படாத காரணத்தால் வாசிக்க முடியாதுள்ளார்கள். இவர்களுக்கு வசதியான கண்ணாடிகள் கொடுப்பதனால் இவர்களின் மனநிலையை மேம்படுத்த முடியும்.

பெரும்பாலான முதியோர் தாங்கள் வாழும் குடும்பத்துக்கு உதவியாக வாழ்வதற்கே விரும்புகிறார்கள். அரிசியில் கல்லைப் பொறுக்கிக் கொடுப்பது முதல் குழந்தைகளைப் பராமரிப்பது வரை செய்யும் பொழுது அவர்களுக்கு ஒரு மனத் திருப்தி ஏற்படுகிறது. அதில் சந்தோஷத்தைக் காண்கிறார்கள்.

செவிப்புலன் குறைந்தவர்களுக்கு, செவிப்புல சாதனங்களைப் பாவிப்பதற்கு உதவுவதும், பற்கள் இல்லாதவர்களுக்கு. பற்களைக் கட்டுவிப்பது மூலமும் நமது குடும்பத்தில், எம்முடன் வாழும் ஊனமுற்ற முதியோருக்கு உதவுவதன் மூலம், அவர்களின் இறுதிக் காலத்தை மனத் திருப்தியுடன் வாழ உதவ முடியும். ★

வைத்திய கலாநிதி ந. சிவராஜா
(தலைவர்,
ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம்)


## D. சேனாதிராஜா அன்சன்ஸ்

கண்பரிசோதித்துக் கண்ணாடி கொடுக்குமிடம்,
பல்கட்டுமிடம், மிதந்த பற்களுக்கு கிளிப் செய்யுமிடம்.

இல, 162, 1 ஆம் குறுக்குந் தெரு
(யாழ். வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)
யாழ்ப்பாணம்.

(51545)


யாழ். செயலர் பிரிவில்

## மேலும் ஒரு தொகுதி குடும்பங்களுக்கு ரூ.5000 மீளக்குடியமர்வு கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ். பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் மேலும் ஒரு தொகுதி குடும்பங்களுக்கு மீளக் குடியமர்வுக் கொடுப்பனவு வழங்குவதற்கான நிதி வந்து சேர்ந்துள்ளதாக யாழ். பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று முதல் வங்கிகளில் இவர்கள் தமது கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளலாமெனவும் தெரிவிக்கப்பட்டது.

ஜே/78 பிரிவில் 57குடும்பங்களும், ஜே/77 பிரிவில் 51 குடும்பங்களும், ஜே/66 பிரிவில் 66 குடும்பங்களும், ஜே/ 88 பிரிவில் 26 குடும்பங்களும், ஜே/ 73 பிரிவில் 50 குடும்பங்களும், ஜே/ 70 பிரிவில் 5 குடும்பங்களும், ஜே/ 75 பிரிவில் 53 குடும்பங்களும், ஜே/76 பிரிவில் 23 குடும்பங்களும், ஜே/ 74 பிரிவில் 57 குடும்பங்களும், ஜே/ 63 பிரிவில் 24 குடும்பங்களும் மீளக்குடியமர்வுநிவாரணம் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)


## தொழிநுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்
## இறுதிப் பரீட்சைகள் - 1997

கீழ்க்காணும் பரீட்சைகள் 08 - 12 - 1997 இல் தொழிநுட்பக்கல்லூரியில் ஆரம்பமாகின்றன. பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தங்கள் அனுமதி அட்டைகளை எதிர்வரும் 05 - 12 - 97 வெள்ளிக்கிழமை பகுதித்தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| | |
|---|---|
| 1. டீசி / 79 - சுருக்கெழுத்தாளர் தேசிய சான்றிதழ் (தட்டெழுத்துப் பரீட்சை) | 08 - 12 - 97<br>09 - 12 - 97<br>10 - 12 - 97 |
| 2. டீசி/86 - ஆங்கிலத் தொடர்பான தேசிய சான்றிதழ் (வாய்மொழிப் பரீட்சை). | 08 - 12 - 97<br>09 - 12 - 97<br>10 - 12 - 97 |

க. ஜெயரத்தினம்
அதிபர்

தொழிநுட்பக்கல்லூரி,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
1997 - 12 - 02

(சி-2232)


பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளை

## ஜனவரியிலிருந்து மீண்டும் பழைய இடத்தில் இயங்கும்

வடமராட்சி, டிச. 3

பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளை எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் பருத்தித்துறையில் இயங்கும்.

இவ்வங்கிக்கிளை கடந்த பல வருடங்களாக நெல்லியடியில் இயங்கி வருவது தெரிந்ததே.

வாடிக்கையாளர்கள் நீண்டகாலமாக விடுத்த கோரிக்கையையடுத்தே இவ்வங்கிக்கிளை பருத்தித்துறையில் இயங்கவுள்ளது.

(இ-173)

## அன்பளிப்பு

வடமராட்சி, டிச. 3

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு 5 ஆயிரம் பனடோல் வில்லைகளை வடமராட்சி சிற்றூர்திச்சேவைச் சங்கம் அன்பளிப்புச் செய்துள்ளது.

(இ173)


★ மலிவு விற்பனை ★

விசேட விலைக் கழிவு விசேட விலைக் கழிவு விசேட விலைக் கழிவு

நத்தார், புதுவருட தினத்தை முன்னிட்டு விசேட விலைக் குறைப்பு

★ பட்டசில்க் பிறின்ற் ★ செக் துணிகள் ★ இன்ரகூலர் ★ ஸ்ரைப் துணிவகைகள் ★ யோ யோ
★ சீஸ் குளோத் ★ சித்தை ★ பெற்சீற் ★ சூட்டிங் ★ ரவுசர்
★ பேபிறோஸ் ★ சேட் வகைகள் ★ சேலைகள் ★ ரெற்றோன் கொட்டன் துணிவகைகள்

சிவ கணேசன் ஸ்ரோர்ஸ்
41, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

(சி-2234)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## உண்ணாவிரதம்

கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 217 தமிழ்க் கைதிகள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தார்கள் என்பதற்காகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள்! அவர்களது விருப்பத்துக்கு மாறாக உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். பாண் சாப்பிடுமாறு பலவந்தப் படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இத்தனைக்கும் இவர்கள் வெறும் சந்தேக நபர்களே. இவர்களில் மிகப் பலர் மீதான பொலிஸ் விசாரணைகளே இன்னும் பூர்த்தி செய்யப்படவில்லை. மிகச் சிலர் மீது வழக்குகள் தொடரப்பட்ட போதிலும் அவற்றின் தீர்ப்புக் கிடைக்கவில்லை.

விசாரணைகளை துரிதப் படுத்தி குற்றமற்றவர்களை, வழக்குத் தொடரப் போதிய ஆதாரமில்லாதவர்களை விடுவிக்க வேண்டும்; ஏனையோர் நீதியின் முன்னர் நிறுத்தப்பட வேண்டும்; என்பதே இவர்களின் உண்ணாவிரதக் கோரிக்கை.

இவர்களில் ஒரு சிலர் சிறைச்சாலைக் கூரையின் மீது ஏறியும் உண்ணாவிரதம் அனுஷ்டித்தார்கள். அதனாலேயே அவர்கள் பாதுகாப்பு அமைச்சின் உத்தரவின் பேரில் களுத்துறைச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார்கள்.

சாத்வீகப் போராட்டத்தின் விளைவு இவ்வாறு தான் அமையும் என்று வெளிக்காட்டப்பட்டுள்ளது!

சம்பந்தப்பட்ட தமிழ் சந்தேக நபர்கள் தம்மை விடுவிக்கக்கோரி கடந்த ஐந்து வருடங்களில் பல தடவைகள் உண்ணாவிரதம் மேற்கொண்டவர்கள்.

அப்போதெல்லாம் — ஒவ்வொரு தடவையும் — இவர்களை விடுவிக்கத் துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்று நீதி அமைச்சு அதிகாரிகள் நேரில் சென்றும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாகவும் உறுதிமொழிகள் வழங்கினர். அவற்றை நம்பி உண்ணா விரதங்கள் கைவிடப்பட்டன.

உறுதிமொழிகள் காற்றோடு கலந்தனவே அன்றி, குற்றம் இழைத்ததாக நிரூபிக்கப்படாமலே இவர்கள் சிறையில் வைத்து வாட்டப்படுகிறார்கள்.

இந்த வகையில் இவர்கள் மட்டும் தான் அநியாயமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதல்ல ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்கள், பொலிஸ் நிலையங்களில் வருடக் கணக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மக்களின் மனித உரிமைகளைப் பேணுவதில் அரசாங்கம் அதிக அக்கறை காட்டி வருவதாக அடிக்கடி கூறப்படுகிறது. குறிப்பாகத் தமிழர்களின் அடிப்படை மனித உரிமைகள் பறிக்கப்படவில்லை என்று சர்வதேச மட்டத்தில் பிரசாரம் செய்யப்படுகிறது.

ஆனால் செயலளவில் —

எல்லாக் கோணங்களில் இருந்தும், முனைகளில் இருந்தும் தமிழர்களின் வாழ்வுரிமை மறுக்கப்படுகிறது; பறிக்கப்படுகிறது! பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிக்குச் சீவன் போகிறது என்ற நிலை இது. தமிழர்களுக்குச் சீவன் போகும் இந்த அனுபவம் அரசினால் அதன் அதிகாரிகளினால் உணரப்படுவதாக இல்லை. சொல் ஒன்று செயல் மாறாக நடந்து தமிழர்கள் நரக வேதனைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்.

இந்த நிலை எப்போது மாறுமோ! அவசரகாலச் சட்டமும் பயங்கரவாத தடைச்சட்டமும் சட்டப்புத்தகத்தில் இருந்து நீக்கப்படும் வரை இந்நிலை மாறாது என்பது நிச்சயம்!

# கிராமசேவையாளர்கள் வராததால் அகதிகள் வீடு செல்ல முடியவில்லை

குருநகர், டிச. 3

கடந்த மாதம் 24ஆம் திகதி தொடக்கம் 27 ஆம் திகதி வரை வன்னியில் இருந்து குடாக் கடலூடாக வள்ளங்களில் வந்த சில அகதிக் குடும்பங்கள், தாங்கள் தொடர்பான விசாரணைகள் முடிவுற்று தமது இடங்களுக்குச் செல்ல ஆயத்தமாக இருக்கின்ற போதும் —

உரிய கிராம சேவையாளர்கள் வந்து அவர்களைப் பொறுப்பெடுக்காத காரணத்தால் தமது இருப்பிடங்களுக்கு செல்லமுடியாமல் முகாமில் தொடர்ந்து தங்கியிருப்பதாக குருநகர் சீநோர் வலைத் தொழிற்சாலை அகதி முகாம் வட்டாரங்கள் தெரிவித்தன.

கல்வியங்காடு, சுன்னாகம், நல்லூர், முத்திரைச் சந்தை, பாஷையூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த அகதி மக்களே இவ்வாறு தமது இருப்பிடம் செல்ல முடியாத நிலையில் இருப்பதாகக் கூறப்பட்டது.

இவர்களைப் பொறுப்பேற்குமாறு உரிய கிராம சேவையாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட உதவிஅரசாங்க அதிபருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்தாகவும் அகதி முகாம் செய்திகள் தெரிவித்தன.

# மன்னாருக்கு ஜயசுந்தர

வவுனியா, டிச. 3

மன்னார் இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் ஆரியரட்ன அப்பதவியிலிருந்து இடமாற்றப்படுவதாகவும், அவரது இடத்திற்கு பிரிகேடியர் காமினி ஜயசுந்தர நியமிக்கப்படுவார் என்வும் ஒரு தகவல் தெரிவிக்கிறது.

பிரிகேடியர் காமினி ஜயசுந்தர யாழ். நகரில் நிலை கொண்டுள்ள 512 பிரிகேட் அணிக்கு கட்டளைத் தளபதியாகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-164)

# பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு; தமிழர் கூட்டணி எதிர்க்கும்

வரவு — செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு நிதி ஒதுக்கீடு மீதான பிரேரணையை தமிழர் விடுதலைக் கூட்டணி எதிர்த்து வாக்களிக்கும். அக்கட்சியின் எம்.பியானஜோசப்பரராஜசிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை பாதுகாப்பு அமைச்சு மீதான குழு நிலை விவாதம் நடைபெறும்.

அன்றைய தினம் அவசர கால சட்ட நீடிப்பு விவாதமும் நடைபெறும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி வரவு—செலவு திட்டத்தில் ஏனைய அமைச்சுகளின் நிதி ஒதுக்கீடுகளை ஆதரித்து வாக்களித்து வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-21)

# நோர்வேக் குழு வருகிறது

யாழ்ப்பாணம், டிச. 3

குடாநாட்டின் கடற்றொழில் அபிவிருத்தி தொடர்பாக ஆராய கொழும்பில் உள்ள நோர்வே தூதரக அதிகாரிகள் குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

மூன்று தினங்கள் இங்கு தங்கியிருக்கும் இக்குழு கடல் வலயத் தடைச்சட்டத்தால் கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்தும் ஆராயும்.

## வரப்பிரகாஷ் மரணம்:

# சந்தேக நபர்களுக்கு பிணை நிராகரிப்பு

ராகிங்கால் உயிரிழந்த பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன் செ. வரப்பிரகஷின் மரணம் தொடர்பான சநதேக நபர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

எஸ். திவாகரன், எம். துளசிகரன், எம். தயாளன், பி. அமுதன், கே. பி. குமரன், சி. காந்தரூபன், ஆர். குமரேஸ் ஆகிய சந்தேக நபர்கள் நேற்று மீண்டும் கண்டி மாஜிஸ்ரேட் திருமதி டி. சி. மிரின்சி ஆராய்ச்சி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை பிணையில் விடுதலை செய்யுமாறு சட்டத்தரணிகள் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

மரணவிசாரணை அறிக்கை கிடைக்காத நிலையில் பிணை அனுமதி வழங்க வேண்டாம் என பொலீஸ் தரப்பு நிதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தது இதனையடுத்து பிணை நிராகரிக்கப்பட்டு விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. (உ-21)

# காணாமற்போனோரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

வினர் அங்குள்ள நிலைமை குறித்து சமர்ப்பித்த அறிக்கையையும் அவர்கள் ஜனாதிபதியிடம் கையளித்தனர். மருந்து, உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை உடன்வன்னிக்கு அனுப்புவதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

வவுனியாவில் 'பாஸ்' முறையால் தமிழர் படும் அவலம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. இதுகுறித்து பாதுகாப்பு அதிகாரிகளுடன் விரிவாகக் கலந்துரையாடிய பின்னர் சரியான நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி பதிலளித்தார்.

வடக்கு - கிழக்கு மற்றும் கொழும்பு உட்பட அனைத்துப் பிரதேசங்களிலும் பாதுகாப்பு பிரிவினரால் தமிழர் தொல்லைக்கு உட்படுத்தப்படுவது குறித்து ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கப்பட்டது. இந்த விடயம் குறித்து விசேடமாக ஆராய்வதற்காக முக்கிய அதிகாரிகளின் கூட்டம் ஒன்றை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையன்று கூட்டுவதாகவும் —

அங்கு இது குறித்து தீர்க்கமான முடிவு எடுக்கலாம் எனவும் — ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அம்பாறை 4 ஆம் கொலனியில் — அண்மைக்காலத்தில் — பாதுகாப்புப் படையினரின் கெடுபிடிகளால் இடம்பெயர்ந்த 545 குடும்பங்களும் மீண்டும் அங்கே சென்று வசிப்பதற்கு தகுந்த பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்று கோரப்பட்டது. அதற்குரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படும் என்றார் ஜனாதிபதி.

ஏனைய இடங்களில் உள்ளது போன்று குடாநாட்டிலும் சமூர்த்தி திட்டங்களை செயற்படுத்தவும் ஜனாதிபதி இணங்கினார்.

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டது. இது குறித்து ஆராய்ந்து உரிய சிபாரிசுகளைச் செய்வதற்கு விசேட குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்தார்.

வடக்கு - கிழக்கில் முதலில் மாகாணசபைத் தேர்தலையும் பின்னர் உள்ளூராட்சித் தேர்தல்களையும் நடத்தும்படி தூதுக்குழு கேட்டுக் கொண்டது. இவற்றில் ஏதேனும் ஒரு தேர்தலை உடன் நடத்துவதற்கு ஜனாதிபதி சம்மதம் தெரிவித்தார்.

குடாநாட்டில் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் சேதமுற்ற ஆலயங்களின் விவரங்களை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த குழுவினர் அவற்றுக்கு உரிய நஷ்டஈடு வழங்குமாறும் கேட்டுக் கொண்டனர். (உ.

## மக்கள் வங்கிக் கிளைகளில்

# ஓய்வூதியம் வழங்கும் நாள்களில் விசேட கருமபீடம் செயற்படும்

மக்கள் வங்கிக்கிளைகளில் ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியர்களின் நலன் கருதி விசேட கரும பீடம் அமைக்கப்படும்.

மக்கள் வங்கி பிரதேச உதவி முகாமையாளர் வடமாகாண ஓய்வூதியர் சங்கத் தலைவர் சி. வீ. கே. சிவஞானத்திற்கு இது குறித்து அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்கள், ஓய்வூதிய நாளகளில் ஓய்வூதியம் பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் வங்கி பிரதேசமுகாமையாளருக்கு சிவஞானம் சுட்டிக் காட்டி இருந்தார்

மக்கள் வங்கியின்ஸ்ரான்லி வீதி, யாழ். பிரதானவீதி கிளைகளில் ஓய்வூதி நாளகளில் மட்டும் விசேட கரும பீடங்களை அமைப்பதற்குமக்கள் வங்கி முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-17)

# கைதானோர் விவரங்களை அரசு வெளியிட வேண்டும்

யாழ்ப்பாணம், டிச. 2

குடாநாட்டில் கைது செய்யப்பட்டவர்களில் இதுவரை விடுவிக்கப்பட்டவர்கள், சிறைச்சாலையில் உள்ளவர்கள் விவரங்களை அரசும் வெளியுறவு அமைச்சும் உடன் வெளியிட வேண்டும்.

புளொட் அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் எஸ். இருபைராஜா மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

குடாநாட்டில் கைதானவர்களில் 600 பேர்கொல்லப்பட்டிருக்கலாம் என்று சர்வதேச மன்னிப்புச் சபை கருத்து வெளியிட்டுள்ளமை தொடர்பாக விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இப்படித் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச்சபையின் அறிக்கையால் கைதாகிக் காணாமற் போனோரின் பெற்றோர் அதிர்ச்சிநிலையும் அடைந்துள்ளனர். இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் உண்மை நிலையை வெளியிடாமல் இழுத்தடித்து வருகின்றது. ஆகவே விவரங்களை உடன் வெளிவிட வேண்டும் — என்று அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார் (ஐ-3)

# விசாரணைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

பயணிகள் இறக்கிவிடப்பட்டு பஸ் சோதனையிடப்பட்டது.

அதன் பின்பு மூடப்பட்ட பிரதான வீதி வழியாக பஸ் செல்ல அனுமதிக்கப்பட்டு, அதில் பயணிகளுடன் சீருடையில் ஆயுதபாணிகளாக விசேட அதிரடிப் படையினரும் மிதிபலகையில் நின்று பயணம் செய்தனர்.

களுதாவளையால் சென்று கொண்டிருக்கையில் திடீரென கிரனேட் வெடிப்புச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது

இச்சம்பவத்தையடுத்து பஸ்ஸில் பயணம் செய்த விசேட அதிரடிப் படையினரும் சில பயணிகளும் பஸ்ஸை விட்டு பாய்ந்து விட்டனர்.

சாரதி பஸ்ஸை தொடர்ந்து செலுத்தியுள்ளார். அந்நேரம் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக கண்டக்டரும், காயமடைந்த பயணிகளும் என்னிடம் தெரிவித்தனர்.

கிரனேட் வெடிப்பு, துப்பாக்கி வேட்டுச் சம்பவத்திற்கு யார் பொறுப்பு என உறுதியாக கூறமுடியாத நிலையில் அவர்கள் உள்ளனர்.

இச்சம்பவத்தில் 27 பயணிகள் காயமடைந்துள்ளார்கள். 7 பேர் கடும் காயமடைந்துள்ளார்கள். ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

பாதுகாப்புப் படையினர் சீருடையில்ஆயுதபாணிகளாக பொதுமக்கள் பயணம் செய்யும் வாகனங்களில் பயணம் செய்யக்கூடாது என அறிவுறுத்தல் விடுக்குமாறு பல தடவைகள் தங்களிடமும், பாதுகாப்பு சிரேஷ்ட அதிகாரிகளிடமும் முறையிட்டிருந்தேன்.

மேற்படி வேண்டுகோள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. அது நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் இச்சம்பவம் உட்பட மேலும் இது போன்ற சம்பவங்களையும் தவிர்த்து பல உயிர்களை காப்பற்றியிருக்கலாம்.

பாதுகாப்பு என்ற போர்வையில் அப்பாவி பொதுமக்கள் உயிர்களோடு விளையாட முடியாது.

பாதுகாப்பு படையினர் குறிப்பிட்ட பிரதேசங்களில் பாதுகாப்பை மட்டும் உறுதிப்படுத்துபவர்கள் மட்டும் அல்லர் பொதுமக்கள் உயிர்களையும் பாதுகாக்க கடமைப்பட்டவர்கள்.

சீருடையில் படையினர் பயணம் செய்வது விசாரணைக்குரிய முக்கியமான விடயமாகும்.

இந்நிலையில் இவ்விடயம் குறித்து பூரண விசாரணையொன்று நடைபெறவேண்டும்.

இதன் மூலம் எதிர்காலத்தில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுவதை தவிர்க்க முடியும் — என்று தெரிவித்துள்ளார். (உ-21)

## நாளை

**கார்த்திகை 19**

வியாழக்கிழமை

திதி: பஞ்சமி

பின் இரவு 4-19 வரை.

நட்சத்திரம்: உத்தராடம்

பிற்பகல் 1.04 வரை.

சுபநேரம்: 7 45-9 15

ராகுகாலம் 1 45-3 15

(புகைப்படத்து இரவுக்குப் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஸ்ஸில் குண்டுவெடிப்பு..

(முதலாம் பக்கத் தொடர்)
ஸில் ஏறினார்கள்.

பஸ்ஸில் இடமில்லாத கார ணத்தால் பஸ் மிதிபலகையில் அவர்கள் பயணம் செய்தார்கள்.

பஸ் சுழுதாவளை கிராமம் ஊடாகச் சென்று கொண்டி ருந்த சமயம் அதில் திடீரென கிரனேட் ஒன்று வெடித்தது. அதைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

பஸ்ஸுக்கு பின்னால் வந்த வாகனம் ஒன்றும் துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்கானது.

இச் சம்பவத்தில் நற்பிட்டி முனை வாசியான கே ஞானப் பிரகாசம் உயிரிழந்தார். 31 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் உடன் கழுவாஞ்சிக்குடி வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப் பட்டு பின்னர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டனர்.

இந்த சம்பவத்தில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் காய மடைந்ததாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

பொதுமக்கள் பயணம் செய்யும் பஸ்களில் படையி னர் பயணம் செய்வதை நிறுத்தஏற்பாடுசெய்யுமாறும் காயமடைந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறும்—

ஈ.பி.டி.பி. அமைப்பின் மட்டக்களப்பு அலுவலகத்தி னர் அந்த அமைப்பின் செய லாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மூலம் அரசிடம் கேட்டுள்ளனர். (உ-21-31)


உ

சிவமயம்

'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அதிகாரவாக அமைந்துள்ள பரமேஸ்வராக் கல்லூரியின்

நிறுவுனரும், சைவப்பெருவள்ளலருமான

சேர். பொன். இராமநாதன்

அவர்களின்

நினைவுதின விழா

04 - 12 - 1997

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் 04 - 12 - 1997 வியாழக்கிழமை காலை 6.00 மணி முதல் 8.00 மணிவரை சங்காபிஷேகமும் விசேட பூசையும் நிகழும். பின்னர் காலை 9 மணியளவில் யாழ். பல்கலைக்கழக சபா மண்டபத்தில் அமைந்துள்ள சேர். பொன். இராமநாதனின் உருவப் படத்திற்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை அவர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவார்.

இதனைத் தொடர்ந்து அன்று பிற்பகல் 2மணிக்கு கைலாசபதி கலையரங்கில் சிறப்புரைகளும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

கலை நிகழ்ச்சிகள்

1. 'கதம்ப நடம்' நாட்டிய நிகழ்ச்சி (யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நடனத்துறை, இராமநாதன் நுண் கலைக்கழகம்)
2. 'அரிச்சந்திர மயான காண்டம்' — நாட்டிய நாடகம் (சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மாணவிகள்)

- இந்து மன்றம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி. (51554)


## ஒன்பது...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுமுறை முடிந்து திரும்பி யுள்ள இராணுவத்தினரை ஏற்றிவர வவுனியாவுக்குச் சென்றுகொண்டிருந்தபஸ்ஸே அது என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக உடனடியாகத் தகவல்கள் கிடைத்த போதிலும் இராணுவத்தினரால் உடனடியாக உதவிக்கு விரைய முடியவில்லை.

சீரற்ற காலநிலை தான் இதற்குக் காரணம். நண்பகல் 12 மணிக்குப் பின்பே இராணுவத்தினரால் உதவிக்கு அவ்விடத்துக்கு செல்ல முடிந்ததாம். (உ-3-9-21)

## ...திதி வெடி..

(முதலாம் பக்கத் தொடர்)

பிள்ளைகளின் தந்தையார் — வேலுப்பிள்ளை இராசரத்தினம் (வயது 65) யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்ட பின்னர் அங்கு மரண மானார்.

படுகாயமடைந்த அவரின் உதவியாளரான — ஆறு பிள்ளைகளின் தந்தையார் — கதிரன் சுந்தரலிங்கம் (வயது 39) யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றார். (உ-ரி-9-173)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

அதிகாரிகள் போதியளவு இல்லை என்றும் —

1995 ஆம் ஆண்டு நடந்த கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான பரீட்சைகளின் முடிவுகள் வெளியிடுவதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் —

தூதுக்குழுவினர் ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறினர்.

விசேட பதவி உயர்வுத் திட்டம் ஒன்றின் கீழ் கல்வி நிர்வாக சேவைக்கு அதிகாரிகளைத் தெரிவு செய்வது என அங்கு இணக்கம் காணப்பட்டது.

யாழ். பாடசாலைகளுக்கான கொம்பியூட்டர்களை எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி கிடைப்பதில் உள்ள தடங்கல் குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு தடங்கலை நீக்குவதாக ஜனாதிபதி உறுதி தெரிவித்தார்.

தொண்டராசிரியர்களை உள்வாங்கும் விடயமாக சுட்டிக்காட்டப்பட்ட போது தீவிர கவனத்துடன் இந்த விடயத்தைப் பரிசீலித்து முடிவு எடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்தார். (உ-3)

## டிரான்ஸ்போமர் சேதப்படுத்தப்பட்டது

அம்பாறை மாவட்டம் நற்பிட்டிமுனையில் நேற்று முன்தினமிரவு டிரான்ஸ்போமர் ஒன்று இனந்தெரியாத நபர்களினால் குண்டு வீசித் தகர்க்கப்பட்டது.

இதனால் 250 குடும்பங்களுக்கான மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது. டிரான்ஸ்போமர் சேதப்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட இழப்பு மூன்றரை லட்சம் ரூபா என இலங்கை மின்சார சபையின் கல்முனை அலுவலகம் மதிப்பிட்டுள்ளது. (உ-21)

## இன்று விடுதலை?

கொழும்பு, டிச. 3

யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு நிர்வாக அதிகாரி வல்லிபுரம் விக்கினேஸ்வர மூர்த்தி கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இன்று ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்படவிருப்பதாகத் தெரியவந்தது.

களுத்துறைச் சிறைச்சாலையில் இவர் தற்சமயம் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## காயமுற்றோர்...

(முதலாம் பக்கத் தொடர்)

சேனை), முகமட் ஹனிபா (30 வயது — வாழைச் சேனை), சுதாகரன் (12 வயது— பக்கியெல்ல), ஆத்மராசா (22 வயது — ஆரையம்பதி), அந்தோனிப் பிள்ளை (49 வயது — திருக்கோயில்), சலீம் (23 வயது — காத்தான்குடி), இம்மனுவல் (51 வயது — மட்டக்களப்பு), ஆறுமுகம் (43 வயது — திருக்கோயில்), தங்கராசா (60 வயது — சேனைக்குடியிருப்பு), சண்முகநாதன் (18 வயது — தேற்றாத்தீவு), தியாகராசன் (52 வயது— மட்டக்களப்பு), ஞானப்பிரகாசம் (39 வயது — மட்டக்களப்பு). (உ-3)


இன்று மங்களகரமான ஆரம்பம்

இரவு - பகல் தொலைபேசிச் சேவை

ஞானம்ஸ் ரேட்ஸ் 150, 152, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உங்கள் உறவினர், நண்பர்களுடன் தாராளமாக உரையாடுவதற்கு இன்று (03-12-97) புதன்கிழமை தொடக்கம் மேற்படி ஸ்தாபனத்தில் எமது சேவையை ஆரம்பித்து உள்ளோம் என்பதை அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

() தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்துடன் இணைந்த [FAX] பக்ஸ் வசதிகள்
() பல்வேறு இடங்களுக்குமான தொலைபேசி வசதிகள்.
() போட்டோ பிரதிசேவை இன்னும் பலவற்றை இத்துடன் இணைத்துள்ளோம்.
() இவற்றுடன் இரவு தங்கி நின்று உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும் வசதி.

உங்கள் தேவையே எங்கள் சேவை

ஞானம்ஸ் ரேட்ஸ் 150, 152, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/2237)


இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03-12-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org